


**28.09.2026**

## தலைப்புச் செய்திகள்

- மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு உரிய நேரம் ஒதுக்குவதை நாட்டுமக்கள் உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தி உள்ளார்.
- எல்நினோ தாக்கத்தால் சாகுபடி பரப்பளவு குறைய நேரிடும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- தமிழக அரசின் தங்கமோதிரம் திட்டத்தை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இன்று தொடங்கி வைத்தார்.
- மின் வெட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தி உள்ளார்.
- ஆசிய விளையாட்டு போட்டிகளில் மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற ஈஷா சிங்கிற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தொ◌ிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு உரிய நேரம் ஒதுக்குவதை நாட்டுமக்கள் உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தி உள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்பது குடிமக்களின் கடமை என்று அறிவுறுத்திய அவர், நாட்டின் எதிர்கால துல்லிய வரைபடத்தை உருவாக்க இது வழிகோலுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

ஷாஹித் பகத் சிங்

நாட்டின் சுதந்திர போராட்ட இயக்கத்திற்கு தன்னிகரற்ற துணிச்சலாலும், வீரத்தாலும் புதிய எழுச்சியை ஏற்படுத்தியவர் பகத் சிங் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

சுதந்திர போராட்ட வீரர் பகத் சிங்கின் பிறந்நாளை ஒட்டி பிரதமர் விடுத்துள்ள வலைதள செய்தியில், தேசத்திற்காக அனைத்தையும் துறந்த அவரின் தியாகம் இளையோருக்கு என்றும் உந்து சக்தியாக திகழும் என்றும் கூறியுள்ளார்.

பகத் சிங்கிற்குகு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒரு ஒளிப்பதிவையும் பிரதமர் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் விடுத்துள்ள செய்தியில், இளம் வயதிலேயே தாய்நாட்டிற்காக தனது இன்னுயிரை ஈந்தவர் பகத் சிங் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

எல்நினோ தாக்கத்தால் சாகுபடி பரப்பளவு குறைய நேரிடும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டில் கரீஃப் சாகுபடி இலக்கு ஏறத்தாழ எட்டப்பட்டு விட்டதாக கூறினார்.

விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதை அரசு முழுமையாக உறுதி செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

மண்வள அட்டை பரிந்துரைகளின் அடிப்படையில் உர பயன்பாடு குறித்த பிரச்சார இயக்கம் விரைவில் தொடங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 11-வது வருடாந்திர கூட்டம் மற்றும் முதலீட்டாளர் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்பதற்காக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கத்தார் தோஹா சென்றடைந்தார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் வங்கியின் செயல்பாடுகள், எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இப்பயணத்தின் ஒருபகுதியாக ஸ்விட்சர்லாந்து, அல்ஜீரியா, ஜோர்டான், சவுதி அரேபியா, நேபாள நாட்டு நிதி அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் திருமதி. நிர்மலா சீதாராமன், கத்தார் தலைவரை சந்தித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

நாட்டிலுள்ள 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சமூக பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தொிவித்துள்ளார்.

புதுதில்லியில் தொழிற்சாலை சார்ந்த தொழிலாளர்கள் உறவு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், 60 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கான 5 லட்சம் ரூபாய் சுகாதார காப்பீடும் இதில் அடங்கும் என்றார்.

நாட்டின் நிலையான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள் நல மேம்பாட்டை முன்னெடுத்து செல்வது குறித்து அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் அவசியத்தையும் டாக்டர் மாண்டவியா எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

தேசத்தின் தனித்துவத்திற்கும், அரசியல் சாசன அமைப்புகளுக்கும், எதிர்கட்சிகள் மாசு கற்பிக்க முயல்வதாக மூத்த பி.ஜே.பி. தலைவரும்,மத்திய அமைச்சருமான திரு. ஜே.பி.நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொய்யான தகவல்கள் மூலம் மக்களை திசைத் திருப்பி குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் குறை கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையத்திற்கு எதிரான புகார்களை ஆணையம் மறுத்துள்ள நிலையிலும் எதிர்கட்சிகள் தொடர்ந்து நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாக தொிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

U.P.I. – உச்சநீதி மன்றம்

2 ஆயிரம் ரூபாய்க்கும் மேற்பட்ட U.P.I. பரிவர்த்தனைக்கு 0.4 சதவிகிதம் வர்த்தக கட்டணம் விதிக்கும் மத்திய அரசின் முடிவிற்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இது தொடர்பான மனுவை விசாரித்த நீதிமன்றம், அடுத்த மாதம் 15-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ள இந்த வணிக கட்டண முறை, தொழில்நுட்பத்தை சார்ந்ததாக உள்ளது என்று தொிவித்தது.

இது தொடர்பாக மத்திய அரசும், இது சார்ந்தவர்களும் 4 வாரங்களுக்குள் பதில் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்துள்ள நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, முத்தலாக் தடைசட்டம் தொடர்பான செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

முத்தலாக் நடைமுறையால் ஏராளமான இஸ்லாமிய மகளிர் பாதிக்கப்பட்ட நிலையில், அப்பெண்களின் வாழ்க்கையில் நம்பிக்கையையும் பாதுகாப்பையும்

ஏற்படுத்தும் வகையில் நரேந்திரமோடி தலைமையிலான அரசு முத்தலாக் தடை சட்டத்தை அறிமுகம் செய்தது.

இதனால் இந்திய அரசியல் சாசன அமைப்பிற்கு ஏற்ப இஸ்லாமிய பெண்களுக்கு சமஉரிமை உறுதி செய்யப்பட்டது.

முத்தலாக் தடை சட்டத்தால் இஸ்லாமிய மகளிரின் வாழக்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் ஏற்பட்டதோடு, இம் மகளிரின் ஆளுமை உறுதி செய்யப்பட்டதுடன், சமூக நீரோட்டத்தில் இணைந்து செயலாற்றவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முத்தலாக் தடை சட்டம் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் சமூக நெருக்கடியால் குரல் கொடுக்க முடியாமல் இருந்த இஸ்லாமிய பெண்களுக்கு இந்த சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் நீதி நிலைநாட்டப்பட்டதோடு அவர்களது உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக அரசின் தங்க மோதிரம் திட்டத்தை முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இன்று தொடங்கி வைத்தார்.

மாநிலம் முழுவதும் 102 மையங்களில் ஒரு லட்சத்து 28 ஆயிரம் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் இன்று வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் 22ஆம் தேதிமுதல் அரசு மருத்துவமனைகளில் பிறந்த அனைத்து குழந்தைகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

நாளை முதல் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்தந்த அரசு மருத்துவமனைகளிலேயே மோதிரம் வழங்கப்படும்.

10 கோடியே 25 லட்ச ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தையும் திறந்துவைத்த முதலமைச்சர் காந்தியடிகளின் பெருமையை எடுத்துரைக்கும் காணொலியையும் பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் மின்வெட்டு பிரச்சனை, சட்டம் ஒழுங்கு, போதைபொருள் புழக்கம் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண முதலமைச்சர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் வலியுறுத்தி உள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில மக்களுக்கான எந்த திட்டம் குறித்தும் முதலமைச்சர் சட்டப்பேரவையில் பேசவில்லை என்று குறை கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

செல்வராஜ்

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழர்களின் பண்பாட்டு சின்னங்கள் குறித்து, திருச்சி மாவட்டம் மணப்பாறை அருகே கல்லூரி பேராசிரியர் திரு. செல்வராஜ் தலைமையில் கள ஆய்வுகள் நடைபெற்று வரும் நிலையில் பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் இதுகுறித்து சுட்டிக்காட்டினார்.

இந்த கள ஆய்வில் மொட்டை மலைப்பகுதி சமணர் படுகைகள், புத்தானத்தம் பெருமாமலையில் கல்வெட்டு எச்சங்கள், கீழ பொய்கைப்பட்டியில் பிற்கால சோழர் கால கல்வெட்டுகள் உள்ளிட்ட பல்வேறு வரலாற்று சான்றுகள் பதிவு செய்யப்படுவதாக பேராசிரியர் திரு. செல்வராஜ் எமது செய்தியாளரிடம் தொ◌ிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

கோ – ஆப்டெக்ஸ்

தென்காசியில் கோ – ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்சித் சிங் இன்று தொடங்கிவைத்தார்.

நடப்பாண்டு 50 லட்சம் ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தொ◌ிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் ஆடை ரகங்கள் கொண்ட கோ ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கிவைத்தார்.

திருவண்ணாமலையில் இன்று இந்த விற்பனையை தொடங்கிவைத்த ஆட்சித்தலைவர் திருமதி வந்தனாகார்க் நடப்பாண்டு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

விழுப்புரம் மாவட்டத்தில் உலக ரேபிஸ் நோய் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து தொடங்கிய விழிப்புணர்வு பேரணியில் கல்லூரி மாணவிகள் பங்கேற்று துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖

ஆசிய விளையாட்டு போட்டிகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற ஈஷா சிங்கிற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தொிவித்துள்ளார்.

குத்துச்சண்டை காலிறுதியில் பிரிவில் மகளிர் 75 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் லவ்லினாவும்,

60 கிலோ எடை பிரிவில் ப்ரியா கங்க்ஹார்ஸும்,

90 கிலோ எடை பிரிவில் கபில் போக்காரியாவும் இன்று களமிறங்கவுள்ளனர்.

ஆடவர் கிரிக்கெட் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இந்தியா ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே இன்று நடைபெறவிருந்த காலிறுதி போட்டி மழையால் கைவிடப்பட்டதை அடுத்து ICC 20-20 தரவரிசை அடிப்படையில் இந்திய அணி அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖